நாள் 18-01-2024

OS No. 51/2020

பி.வா.சா.1, திரு.ராமநாதன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. வழக்குரை தபசில் சொத்துக்கள் எனது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து ஆகும். வழக்கின் வாதி எனது மகன். வழக்கின் ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் என் உடன்பிறந்த சகோதரர்கள். எனது தகப்பனார் இறந்த பின்னர் நானும், எனது சகோதரர்களான ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளும் பெரியவர்கள் முன்பு பேசி சமாதானமாக பிரித்துக் கொண்டோம். காலி மனைக்கு தென்பகுதியில் இருக்கின்ற இரண்டு வீடுகளும் ஒன்று மற்றும் இரண்டு பிரதிவாதிகளுக்கும், காலி மனைக்கு வட பகுதியில் உள்ள இடம் எனக்கும், நடுப்பகுதி காலி மனையாகவும் பேசிக்கொள்ளப்பட்டது. காலி மனை 12 அடி இடத்தை தவிர எனக்குள்ள இடத்தில் நான் வீடு கட்டினேன். எனது வீட்டிற்கும், எனது சகோதரர்களுக்கு கொடுத்த இடத்திற்கும் இடையே பொது முற்றம் உள்ளது. எனது இடத்திற்கு அடுத்து கீழ்ப்பக்கம் 4 அடி பொது நடைபாதை உள்ளது. முற்றம் மற்றும் பொது நடைபாதை ஆகியவற்றை பொதுவாக பராமரித்து கொண்டிருக்கிறோம்.

2. எனக்கு கிடைத்த இடத்தை எனது பையன் பெயருக்கு எழுதி வைத்து அவர் வீடு கட்டி உள்ளார். இதற்கு முன்பு பிரதிவாதிகளுக்கு இடையே ஏதாவது வழக்கு நீதிமன்றத்தில் நடந்ததா என்றால் ஆமாம். நிரந்தர உறுத்து கட்டளை வழக்கு தாக்கல் செய்து தடை உத்தரவு பெற்றார்கள். நீதிமன்றத்தில் நான் எதிர் வழக்கு நடத்தி எனக்கு நீதிமன்றத்தில் வீடு கட்ட அனுமதி கிடைத்தது. நீதிமன்றத்தில் இருந்து ஆணையர் நியமனம் செய்யப்பட்டு இடத்தை வந்து பார்த்தார்கள். மேற்படி வழக்கிற்கு மேலாக மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. பிரதிவாதிகள் ஆட்சேபணை செய்ததன் அடிப்படையில் ஆய்க்குடி பேரூராட்சியில் இருந்து உங்களை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை.

**<u>1வது மற்றும் 2வது பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

3. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை உறுதி கூற்றை படித்து பார்த்துள்ளேன். இந்த வழக்கின் வாதியான எனது மகன் தாக்கல் செய்துள்ள வழக்கரையையும் படித்து பார்த்துள்ளேன். வழக்கு சொத்தில் தற்போது எனக்கு எந்த உரிமையும் இல்லை. 2005 ஆம் ஆண்டிற்கு முன்பு எனக்கு இருந்த உரிமை அனைத்தையும் எனது மகனுக்கு எழுதிக் கொடுத்துவிட்டேன்.

29.05.2005 தேதியிட்ட நன்கொடை ஆவணம் (வா.சா.ஆ.2) மூலமாகத்தான் உங்கள் மகனுக்கு எழுதிக் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின் அசல் என் வசம்தான் உள்ளது. மேற்படி நன்கொடை ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட சொத்து தான் இந்த வழக்கின் இரண்டாவது தபசில் சொத்து என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நீங்கள் உங்கள் மகனுக்கு 650 சதுர அடி இடம் தான் எழுதிக் கொடுத்துள்ளீர்கள் என்றால் சரிதான்.

4. இந்த வழக்குரை மூன்றாவது தபசில் சொத்து குறித்து மேற்படி நன்கொடை ஆவணத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி நன்கொடை ஆவணத்தில் தெரிவிக்கப்படாத பொது முற்றம் குறித்து தான் பாகப்பிரிவினை கேட்டு உங்கள் மகன் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அதில் ஆக்கிரமிப்பு உள்ளது. வா.சா.ஆ.2 நன்கொடை ஆவணத்தில் எனக்கும், எனது சகோதரர்களான 1வது மற்றும் 2வது பிரதிவாதிகளுக்கும் இடையே வாய்மொழி பாகப்பிரிவினை நடைபெற்றதாக எதுவும் குறிப்பிடவில்லை. அதனால், 1982 ஆம் வருடம் நீங்கள் வாய்மொழி பாகப்பிரிவினை நடந்ததாக சொல்லும் விவரங்கள் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. OS No.48/2006 வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரை (Written Statement) இந்த வழக்கில் வா.சா.ஆ.10 ஆக குறியீடு

செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் எனக்கு சார்பு செய்யப்பட்ட வழக்குரையின் நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை நான் தான் வாதியான எனது மகனிடம் கொடுத்து வழக்கு தாக்கல் செய்ய சொல்லியுள்ளேன்.

5. நான் எனது மகனுக்கு எழுதிக் கொடுத்த நன்கொடை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து தொடர்பாக நடைபெற்ற வழக்கு தான் OS No.48/2006 ஆகும். OS No.48/2006 வழக்கில் நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் (வா.சா.ஆ.10) பொது முற்றம் பற்றி சொல்லவில்லை. (சாட்சி மேற்படி எதிர்வழக்குரையை படித்துப் பார்த்து கூறினார்.) உங்களுக்கும், உங்கள் இரு சகோதரர்களான ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளுக்கும் இடையே பிரிக்கப்படாத சொத்து இருப்பதாகவும், மேற்படி வா.சா.ஆ.10 எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண். 48/2006 வழக்கு நடந்த போது ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளுக்கு அவர்களின் வீட்டிற்கு செல்லும் படிக்கட்டுகள் இருந்தது என்றால் இல்லை. இந்த வழக்கில் வழக்குரை மூன்றாவது தபசில் சொத்தாக காட்டியுள்ள சொத்தானது ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளுக்கு தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல.

6. இந்த வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் எனது மகனுக்கும், ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளுக்கும் இடையே தகராறு எதுவும் கிடையாது. இரண்டாவது தபசில் சொத்தை பொறுத்து உங்களுக்கும், உங்கள் சகோதரர்களான ஒன்றாது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளுக்கும் இடையே நீண்ட காலமாக தகராறு இருந்து வருகிறது என்றால் இல்லை. ஆக்கிரமிப்பு செய்து கட்டிய பின்னர் தான் போலீஸ் ஸ்டேஷனில் புகார் கொடுத்தேன். ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகள் மீது நீங்கள் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தீர்கள் என்றும், உங்கள் மகன் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வழக்கு மூலம் நீங்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் கூறப்பட்டுள்ளது என்றால் என் மகன்தான் புகார் கொடுத்தார். உங்களுக்கும், உங்கள் சகோதரர்களான ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளுக்கும் இடையே உள்ள முன் பகையின் காரணமாக நீங்கள் உங்கள் மகனை தூண்டிவிட்டு இந்த வழக்கை போட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

7. அதனால், நீங்கள் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கிற்கு விரோதமாக தகவல்களை உங்கள் மகனிடம் சொல்லி பொய்யாக இந்த வழக்கை போட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கு வாதி உங்கள் மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வழக்குரை

இரண்டாவது தபசில் சொத்து மட்டும்தான் உங்களுக்கும், ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளுக்கும் இடையே பாகம் பிரிக்கப்படாமல் இருந்தது என்றும், அதை பொறுத்து மட்டும்தான் அசல் வழக்கு எண். 48/2006 வழக்கு ஒன்றாவது மற்றும் இரண்டாவது பிரதிவாதிகளால் உங்கள் மீது தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அதுவும் பிரிக்கப்பட்ட சொத்து தான். மேற்படி அசல் வழக்கு எண். 48/2006 நடந்த போது உங்கள் குடும்பத்தில் ஒரு நபர் இறந்து விட்டதால் அப்போது ஏற்பட்ட சமாதானத்தின் அடிப்படையில் மேற்படி வழக்கை மேல் நடத்தவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

M SUNIL RAJA

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by M SUNIL RAJA
Location: Shencottah
Date: 2024.01.18 17:16:13 +0530

District Munsif cum Judicial Magistrate,
Shenkottai